ஸ்பெஷல், நட்ஸ், வனிலா
புருட்சலட் ஐஸ்கிறீம், கிறீம்
சர்பத் ஆகியவற்றைச்
சுவைத்து மகிழ்ந்திட
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 22 வியாழக்கிழமை (06 - 07 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 222

தரமான சுவையான
ஐஸ்கிறீம், குளிர்பானங்கள்
மற்றும்
சிற்றுண்டி வகைகளை
புசித்து இன்புற
ராஜா குளிர்
சுவையகம்
(ராஜா கிறீம் ஹவுஸ்)
36, சந்தோஷம் தெரு,
யாழ்ப்பாணம்.
(சி/538)

# மீட்கும் பிரதேசம் விரிவடைவதற்கு ஏற்ப எமது படைபலமும் அதிகரிக்க வேண்டும்!

## ரெலோ உறுப்பினர்களால் கடத்தப்பட்ட வர்த்தகர்

### பொலீஸார் மீட்டனராம்

கொழும்பு, ஜூலை 6

இரண்டு லட்சம் ரூபா கப்பம் கோரி, ''ரெலோ'' இயக்கத்தினரால் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் வியாபாரி ஒருவரை வவுனியா பொலீஸார் கடந்த வாரம் மீட்டனர் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்த வியாபாரி கொழும்பிலிருந்து துணி வகைகளை யாழ்ப்பாணம் கொண்டு சென்று விற்பவர் என்றும் —

தாம் கோரிய கப்பப் பணத்தை அந்த வியாபாரி செலுத்த மறுத்ததால் அவரை ''ரெலோ'' குழுவினர் கடத்திச் சென்று தடுத்து வைத்தனர் என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

இது பற்றிய தகவல் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட முகாமை பொலீஸார் சுற்றிவளைத்தனர் என்றும் —

அதனையடுத்து அங்கிருந்த ''ரெலோ'' உறுப்பினர்கள் தப்பி ஓடினர் என்றும் —

அதன் பின்னர் சம்பந்தப்பட்ட வியாபாரியையும், அவர் கொண்டு வந்த துணி வகைகளையும் பொலீஸார் மீட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## கரும்புலிகள் தினக்கூட்டத்தில் நேற்று கரிகாலன் விளக்கம்

வடமராட்சி, ஜூலை 6

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் மீட்கும் பிரதேசம் விரிவடைகின்றது. அதற்கு ஏற்றவாறு எமது பலமும் அதிகரிக்கப்பட வேண்டும். இல்லையேல் மீட்ட பிரதேசத்தை நாம் இழக்க வேண்டி வரும்.

— இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. க. கரிகாலன்.

நேற்று இரவு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கில் நடைபெற்ற கரும்புலிகள் தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு திரு. கரிகாலன் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு கரும்புலியும் ஒவ்வொரு பரிமாணத்தைத் தோற்றுவித்துள்ளனர்; தமிழீழத்தின் மீதான இராணுவ ஆக்கிரமிப்பை முறியடிப்பதில் இக்கரும்புலிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சகாப்தத்தைப் படைத்துள்ளார்கள்.

மூன்றாம் கட்ட ஈழப் போரை திருகோணமலையில் கடற் கரும்புலிகளே ஆரம்பித்து வைத்தார்கள்.

எமது தலைவரின் தீர்க்க தரிசனமான வழிகாட்டல்கள், நெறிப்படுத்தல்களுடன் மேற்கொள்ளப்படும் கரும்புலித் தாக்குதல்களால் அரச நிலை குலைந்துள்ளது.

சமாதானம் மூலம் தீர்வு காணப்போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த சந்திரிகா இப்போது யுத்தம் மூலம் தீர்வு காணப்போவதாகக் கூறுகின்றார்.

பேச்சில் நம்பிக்கையுடன் நாம் ஈடுபட்டோம்; ஆனால் நம்பிக்கையீனத்துடன் அரசு பேச்சுவார்த்தையில் இறங்கியது. அதனால் அது பயனற்றுப் போனது.

அரசிடம் தீர்வு இல்லை

நேர்மையான தீர்வு எதுவும் அரசிடம் இல்லை. இனி சமாதானப் பேச்சு உருவாக முடியாத ஒரு நிலையை அரசு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்ட பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மட்டக்களப்பில் கைது!

கொழும்பு, ஜூலை 6

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் சிங்கள இனத்தைச் சேர்ந்த பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மட்டக்களப்பு பொலீஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பொலீஸ் நிலையம் ஒன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.

செட்டிபாளையத்தில் நடைபெற இருந்ததாகக் கூறப்படும் தாக்குதல் குறித்து அறிந்திருந்தும்— அது பற்றி தகவல் தெரிவிக்காமல் லீவில் சென்று விட்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர் ஒருவரின் மூலமே இந்த சப் இன்ஸ்பெக்டர் பற்றிய தகவல்கள் தெரிய வந்ததாக கூறப்பட்டது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ நீதிமன்றம் நேரடியாக மண்டைதீவுக்கு சென்று விசாரிக்கும்

இராணுவத்துக்கு மண்டைதீவில் ஏற்பட்ட தோல்வி குறித்து விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றம், மண்டைதீவுக்கு நேரடியாகச் சென்று விசாரணை நடத்தும் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரட்ன தலைமையிலான இந்த இராணுவ நீதிமன்றத்தில் தியத்தலாவையில் உள்ள இராணுவ பயிற்சி மையத்தின் தளபதி பிரிகேடியர் அஸ்ரன் விஜேந்திர, குருநாகலில் உள்ள 13 ஆவது பிரிகேட் அணியின் தளபதி பிரிகேடியர் மல்லவராச்சி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மேற்படி விசாரணைக் குழு கொழும்பிலிருந்து முதலில் ஊர்காவற்றுறைக்கும் பின்னர் அங்கிருந்து மண்டைதீவுக்கும் சென்று விசாரணைகளை நடத்தும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை — மண்டைதீவு பிரிகேட் தளபதி பிரிகேடியர் சரத் பொன்சேகா உட்பட பலரின் வாக்குமூலங்களையும் இந்த இராணுவ நீதிமன்றம் பதிவு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### ஒதுக்கப்பட்டவருக்கு மீண்டும் முக்கிய இடம்

## இராணுவ நீதிமன்றத் தலைவரின் நியமனம் குறித்து பலத்த ஆச்சரியம்

இராணுவத்துக்கு மண்டைதீவில் ஏற்பட்ட தோல்வி குறித்து விசாரணை செய்யும் இராணுவ நீதிமன்றத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்ன நியமிக்கப்பட்டிருப்பது இராணுவ வட்டாரங்களில் பலத்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

வடபகுதியின் முப்படை நடவடிக்கைகளின் மேலாளராக நியமிக்கப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்ன, வடபகுதியில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைத்திட்டம் ஒன்று தொடர்பாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையுடன் நேரடியாக கருத்து முரண்பாடு கொண்டு வாதப் பிரதிவாதத்தில் ஈடுபட்டதை அடுத்து அப்பதவியிலிருந்து ஒரு சிலதினங்களில் தூக்கி வீசப்பட்டார் பின்னர் முக்கியத்துவம் அற்ற தொண்டர் படைத் தளபதி பதவிக்கு அவர் மாற்றப்பட்டார்.

அவ்வாறு ஒதுக்கப்பட்டவருக்கு முக்கியத்துவம் கொடுத்து — இராணுவ விசாரணை மன்றத் தலைவராக அவரை நியமித்து — அனுப்பியிருப்பது ஏன் என்று புரியவில்லை என கொழும்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டது.

போதிய ஆட்பலம் ஏதுமின்றி வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிப்பது முட்டாள்தனமானது என வலியுறுத்தி வந்தவர் ஏ. எம். யூ. செனிவிரத்ன என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மண்டைதீவுக்கு இலகு காலாட்படை

யாழ்ப்பாணம், ஜூலை 6

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான மண்டைதீவு தளத்துக்கு தற்போது இலகு காலாட்படை (Intantry Unit) அனுப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மண்டைதீவுத் தளம் கடந்த வாரத்தில் தாக்குதலுக்கு இலக்கான போது ''கெமுனு வோச்'' படையணி அங்கு நிலைகொண்டிருந்தது.

முகாமைக் கைப்பற்றிய புலிகள் அதனை அழித்துக் கைவிட்டுச் சென்ற பின்னர் ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து முந்நூறு ''கெமுனு'' படையினர் அனுப்பப்பட்டனர்.

தற்பொழுது அவர்கள் அகற்றப்பட்டு இலகு காலாட்படை அங்கு அனுப்பப்பட்டுள்ளதாக அச் செய்திகள் தெரிவித்தன. (உ-3)

## வந்தாறுமூலையில் புலிகள் அதிரடி! முகாமை விட்டு படையினர் ஓட்டம்!!

கொழும்பு, ஜூலை 6

வந்தாறுமூலையில் உள்ள உப்போடை இராணுவ முகாம் கடந்த ஞாயிறு இரவு விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் தாக்குதல் நடந்ததாகவும் —

சிறிது நேரம் எதிர்த்தாக்குதல் நடத்திய படையினர் பின்னர் பின்வாங்கிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினர் பின்வாங்கிச் சென்றதை அடுத்து விடுதலைப்புலிகள் முகாமை முற்றுகையிட்டு கட்டடங்களுக்குச் சேதம் ஏற்படுத்திவிட்டு ஆயுதங்களை எடுத்துச் சென்றனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதலை அடுத்து அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வந்தாறுமூலை பல்கலைக்கழக கட்டடங்களில் தற்காலிகமாகத் தங்கியிருந்தனர். [ஐ]

## கரும்புலி வீரர்களுக்கு மக்கள் உணர்வு பூர்வமான அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 6

கரும்புலிகள் நினைவு தினம் நேற்று தமிழீழப் பிரதேசம் எங்கும் மக்களால் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலும், வன்னியிலும் மிகவும் பரந்த அளவில் கரும்புலிகள் நினைவு தினம் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய பரிமாணத்தையும், பல வெற்றிச் சாதனைகளையும் நிலைநாட்டி தமது காப்பரண்களாக விளங்கிய கரும்புலிகளை நினைவு கூர்ந்து லட்சக்கணக்கான மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

ஆங்காங்கே நிர்மாணிக்கப்பட்ட கரும்புலிகளின் நினைவாலயங்களிலும், பந்தல்களிலும் வைக்கப்பட்டிருந்த கரும்புலி வீரர்களின் திருவுருவப் படங்களுக்குத் தீபம் ஏற்றியும், மலர்மாலைகள், மலர்கள் சார்த்தியும் மக்கள் தமது மனப்பூர்வமான அஞ்சலியைச் செலுத்தினர்.

கரும்புலிகள் நினைவு நாள் பிரதான விழா, முதற்கரும்புலி கப்டன் மில்லர் சாதனை படைத்த நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதான விழா நடைபெற்ற நெல்லியடியை நோக்கி, வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளில் இருந்தும் கரும்புலிகளின் வீர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடி நேற்று விழாக்கோலம்; கரும்புலி மில்லரின் சிலை திறப்பு

வடமராட்சி, ஜூலை 6

கரும்புலிகள் நினைவு தினத்தையொட்டி நெல்லியடி நேற்று விழாக்கோலம் பூண்டிருந்தது.

நினைவுப் பொதுக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நெல்லியடிச் சந்தியிலிருந்து மாலை 6 மணிக்கு கூட்டம் நடைபெற்ற நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை நோக்கி ஊர்வலம் ஆரம்பமானது.

இந்த ஊர்வலத்தில் ஆரம்பத்தில் கடற்புலிகளின் அணிவகுப்பைத் தொடர்ந்து மாணவர் அமைப்பின் பாண்ட் வாத்தியக் குழுவும், தொடர்ந்து பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியக்குழுவும் முன்னே சென்றன. அதனைத் தொடர்ந்து மலர்வளையங்கள் மாணவிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் சுப்பசொனிக் தாக்குதல்

கொழும்பு, ஜூலை 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு சுப்பசொனிக் தாக்குதல்கள் இடம் பெற்றதாக இலங்கை வானொலி அறிவித்தது. ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-3)

## ஏறாவூரில் 150 பொலீஸார் கூண்டோடு இடமாற்றம்

கொழும்பு, ஜூலை, 6

ஏறாவூர் பொலீஸாருக்கும் அப்பகுதிக் கிராமங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கும் இடையில் கடந்த 28 ஆம்திகதி இடம்பெற்ற மோதல்களைத் தொடர்ந்து, அப்பகுதியிலுள்ள ஆறு பொலீஸ் நிலையங்களிலிருந்து 150 பொலீசாரும் ஒரு பொறுப்பதிகாரியும் மாற்றப்பட்டுள்ளனர்.

இப்பொலீஸார் ஏறாவூர் பிரதேசத்திற்குள்ளேயே வேறு பொலீஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற மோதல் மற்றும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் முஸ்லிம் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்; மூன்று பொலீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பங்கீட்டு அட்டைகளுக்கு மீண்டும் மா விநியோகம்

யாழ்ப்பாணம் ஜூலை 6

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊடாக மீண்டும் ஒரு முறை பங்கீட்டு அட்டைக்கு மா வழங்கப்பட உள்ளது.

அண்மையில் குடும்பம் ஒன்றுக்கு 5 கிலோ மா வீதம் ...

யாததால், ப. நோ. கூ. சங்கங்கள் பலவற்றிலும் மா எஞ்சியிருப்பதாகவும் —

எஞ்சியுள்ள மாவின் அளவைப் பொறுத்து, இரண்டாவது கட்டமாகவும் பங்கீட்டு அட்டைக்கு மாவை விநியோகிக்குமாறு உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ப. நோ. கூ. சங்கங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (அ-4)

## 3 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

முல்லை மாவட்டத்தில் திங்களன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

லெப்டினன்ட் சஞ்சீவ் (சுப்பிரமணியம் ஜெயானந்தன் — மன்னார்), 2 ஆம் லெப்டினன்ட் கலிங்கன் (இராசதுரை இராஜேஸ்வரன் — முல்லைத்தீவு) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் வவுனியாவில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் சுரேந்திரன் என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ-3]

## சம்பளமற்ற லீவில் சென்ற படையினருக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 6

சம்பளமற்ற லீவைப் பெற்றுக் கொண்டு வேறு கடமைகளில் ஈடுபட்ட படை அதிகாரிகளில், இத்தகைய லீவு முடிந்தும் வேலைக்கு திரும்பாதவர்களை உடன் அவர்களது பிரிவு தலைமையகத்துக்கு சமுகமளிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கேட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பாக வேலுக்கு இவர்கள் கடமைக்கு வர வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

## ஸ்ரீலங்காப் படைகளுக்கு பாகிஸ்தானும் ஆயுத உதவி?

கொழும்பு, ஜூலை 6

விடுதலைப் புலிகளுடனான போராட்டத்துக்கு ஸ்ரீலங்கா அரசுக்குத் தேவைப்படும் சாதாரண ஆயுதங்களை பாகிஸ்தான் அரசாங்கம் ஸ்ரீலங்காவுக்கு வழங்கியுள்ளது என்றும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருக்கு பயிற்சி அளிக்கும் விடயத்திலும் பாகிஸ்தான் அரசு உதவி வழங்கி வருகின்றது என்றும் —

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டுள்ளது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், இரும்பு விறாக்கைகள் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், இல. 303, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(37359)

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொதுவிவேகம்" 97/- வினாத்தாள் I, II ற்குரியது. வெளியீடு, அஸ்ரன் பதிப்பகம் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். 18%கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

(சி–1717)

### இலகு திருமண சேவை

33 வயது, திருவாதிரை, செவ்வாயற்ற I.C.R.Cயில் வேலை செய்யும் அழகிய பெண்ணுக்கு இரண்டாம் தாரமாக பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். 10 வயதில் மகன் உண்டு. மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.

[37340]

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களுக்கும் சகல தொழில்களிலும் மணமகன், மணமகள் உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட், மல்லாகம்

(8805)

---

உ

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
### வருடாந்த
## இல்ல மெய்வல்லுநர் போட்டி

காலம்: 08 - 07 - 1995 சனிக்கிழமை
பிற்பகல் 1-45 மணி

முதன்மை விருந்தினர்:
**திரு. ஈ. சரவணபவன் அவர்கள்**
[முகாமைப் பணிப்பாளர், உதயன் நிறுவனம்]

பரிசில் வழங்குநர்:
**திருமதி யசோதை சரவணபவன் அவர்கள்**

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
03-07-1995.

(சி–1606)

---

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
க. பொ. த. சா. தரம் கடல் வளப் பாட

## பயிலுநர் ஆசிரியருக்காக
# பயிற்சி வகுப்புக்கள்
# ஆரம்பம்

மேற்படி பயிற்சி யாழ். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் 05 - 08 - 95 முதல் ஆரம்பமாகி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தலா 4 மணி நேர விகிதம் தொடர்ந்து டிசம்பர் 15 ஆம் திகதி வரை நடைபெறும். க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி 31 - 07 - 95. ஆகையால் இப் பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புவோர் 20 - 07 - 95 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். மேலதிக விவரங்களுக்கு;

பொது முகாமையாளர்,
கடல்வள அபிவிருத்திப் பகுதி,
த. பொ. மே. நிறுவனம்,
தாவடி.

குறிப்பு:
சென்ற ஆண்டில் இப்பயிற்சியில் இணைந்து கொண்ட 36 பரீட்சார்த்திகளில் கடல்வளப் பாடத்தில் 10 பேர் விசேட சித்தியையும், 15 பேர் திறமைச் சித்தியையும் பெற்றுள்ளனர். இவர்களில் தகுதியானவர்களை ஆசிரியர் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(சி–1610)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி பகவதி நாகராஜன்**

தோற்றம்: 20 — 01 — 1947
மறைவு: 18 — 06 — 1994

திதி: 06 — 07 — 1995

ஆவரங்கால் பெற்றெடுத்த அன்னையே!
தனங்கிளப்பில் குடும்பப் பெருமை பொங்க வைத்து
கல்முனையில் ஆனைப்பிள்ளையார் தொண்டு செய்து
கோயில் அக்கா என்று பெயர் ஏற்றாய் துயிலுகையில்
மின்னலென இறைவனடி சேர்ந்தனையோ
தூயவளே உன் பிரிவுத் துயரால் துடித்து நிற்கும்;

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மைத்துனர், சகோதரர்,
உற்றார், உறவினர்.

தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(37355)

---

# தேங்காய் எண்ணெய் ஏற்ற துறைமுகபடையினர் மறுப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 6
யாழ். மாவட்டத்திற்கு கப்பலில் தேங்காய் எண்ணெய் எடுத்து வருவதற்கும் படையினர் அனுமதி மறுத்துள்ளதாக தெரிய வருகிறது. மாஹோ கப்பலில் 2 ஆயிரத்து 500 பரல் தேங்காய் எண்ணெய் எடுத்து வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதும் கொழும்பு துறைமுகத்திலுள்ள இருக்கும் 'றன்கள' (Rangala) முகாம்கடற்படையினர் தேங்காய் எண்ணெயை எடுத்து வருவதற்கு இறுதி நேரத்தில் அனுமதி மறுத்து விட்டனர்.

'மாஹோ' கப்பலில் ஏற்றுவதற்காக மேலும் 35 லொறிகளில் பொருள்கள் கொழும்புத்துறை முகத்தில் காத்திருப்பதாகவும்—அவற்றை ஏற்றுவதற்கும் கடற்படையினர் சோதனை என்ற போர்வையில் கெடுபிடிகளை விதித்து வருவதாகவும்—அறிய வந்தது.

[ஐ-5-4]

## இரண்டு பரீட்சைகள்

இலங்கை நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதியும்—

இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதியும் நடைபெறவுள்ளன என்று கொழும்பில் இருந்து யாழ். செயலகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை.6
ஆனைக்கோட்டை ஆலடி ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம், நாளை நடைபெறும்.

[உ–15]

---

அகில இலங்கை
பரஸ்பர சகாய நிதிச் சங்கம்
வரையறுக்கப்பட்டது
வட்டுக்கோட்டை

## 37 ஆவது ஆண்டு
# பொதுக் கூட்டம்

09 — 07 — 1995 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30மணி

மேற்படி சங்கத்தின் 37ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 09-07-95 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சித்தன்கேணியில் அமைந்துள்ள வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் த. மு. கதிர்காமநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஒழுங்காக அங்கத்துவ சகாயம் கட்டுபவர்களுக்கு தனிப்பட்ட அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர் நலன் கருதி இவ் அறிவித்தலும் வெளியிடப்படுகின்றது.

கௌரவ செயலாளர் — சங்கச் சேவையில் பொது முகாமையாளர்.

(சி/1604)

---

உ

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்
### கொக்குவில்
# 7ம் திருவிழா விஞ்ஞாபனம்

**இன்று [06 – 07 – 1995] வியாழக்கிழமை**

பி. ப 3-00 மணி : ஸ்நபன அபிஷேகம்
மாலை 4-30 மணி : பூசை
மாலை 5-30 மணி : விசேஷ சாத்துப்படியுடன் பூச்சப்பரத்தில் அம்பாள் வீதி வலம் வருதல்

**மங்கள வாத்தியம்**
த. கணேசன் குழுவினர் (தேவஸ்தானம்)
வி. செல்வராசா குழுவினர்
கே. எம். சிவசுப்பிரமணியம் குழுவினர்
பிச்சையப்பா, ரவி, ரஜி குழுவினர்

— விழா உபயகாரர்.

[37364]

---

யாழ் வணிகர் கழகம் விடுக்கும்
# முக்கிய அறிவித்தல்
# விசேட பொதுக்கூட்டம்

நாளை 07-07-95 வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் யாழ் வணிகர் கழக வர்த்தக உரிமையாளர்கள் அனைவருக்கும் ஓர் விசேட பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதால் சகல வணிக நிலைய உரிமையாளர்களும் குறித்த நேரத்தில் சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தமது வணிக நிலையத்தை விட்டு வர வசதியில்லாதவர்கள் தயவு செய்து தமது வணிக நிலையத்தை பூட்டி சமூகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

எந்த ஒரு வர்த்தக உரிமையாளருக்கும் பதிலாக அவரின் ஊழியர் பிரதிநிதித்துவம் வகிக்க முடியாதென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி!

- யாழ். வணிகர் கழகம்.

(சி/1613)

---

இலங்கை வானொலிச்செய்தி தொடர்பாக

# கத்தோலிக்க மதத் தலைவர்கள் அரசு மீது கண்டனம் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 6
வடபகுதிக்குத் தாம் மேற்கொண்ட விஜயம் குறித்து தொடர்பு சாதனங்கள் தவறான செய்திகளை வெளியிட்டிருப்பதாக கத்தோலிக்க ஆயர் மன்ற சங்கத் தலைவர் உதவி மேற்றிராணியார் அதி வண. மல்கம்ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆயர் இல்லத் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம்கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இதனை அறிவித்தார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளால் வடபகுதியில் கத்தோலிக்க மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும்—

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அவர்கள் இணைந்தெழுந்து ஊர்வலம் நடத்தியதாகவும் வடபகுதிக்குச் சென்றுதிரும்பிய உதவிமேற்றிராணியார் அதி. வண. மல்கம் ரஞ்சித் கூறியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கடந்த தினங்களில் செய்தியறிக்கையில் தெரிவித்திருந்தது.

இது குறித்தே அதி. வண மல்கம் ரஞ்சித் தமது கண்டனத்தையும், மறுப்பையும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

அரச வானொலியில் ஒலிபரப்பப்பட்ட இந்த விசமப் பிரசாரம் குறித்து யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்க மதத் தலைவர்கள் பலர் தமது கண்டனங்களை வெளியிட்டுள்ளனர்.

கத்தோலிக்க தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மீது வெறுப்படைந்திருப்பதாக இலங்கை வானொலி கூறிய பிரசாரம் முற்றிலும் பொய்யானது என்று யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க குரு முதல்வர் அருட்திரு எஸ். ஜே. இம்மனுவேல் தெரிவித்தார்.

கத்தோலிக்கத் திருச்சபை தமிழ் மக்களின் வளர்ச்சியில், போராட்டத்தில் என்றும் இரண்டறக் கலந்து செயற்பட்டு வருகிறது. கத்தோலிக்கத் திருச்சபையை தமிழ் மக்களிடம் இருந்து பிரிக்கும் நோக்குடனேயே அரசு இந்த செய்தியை வெளியிட்டதாக நாம் கருதுகிறோம் என்று கத்தோலிக்க மதகுரு அருட்திரு சி. ஜி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (ஐ)

# உளவுப் பிரிவுத் தலைவர் நீக்கம் ராணுவ வட்டாரங்களில் ஆச்சரியம்

கொழும்பு, ஜூலை 6
ராணுவத்தின் உளவுப் பிரிவுத் தளபதி பிரிகேடியர் சாந்த கொட்டேகொட பதவி நீக்கம் செய்யப்பட்டது குறித்து ராணுவ வட்டாரங்களில் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மண்டைதீவுத் தாக்குதலை அடுத்து பிரிகேடியர் சாந்த கொட்டேகொட பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மண்டைதீவுத் தாக்குதல் நடந்த தினத்துக்கு அடுத்த நாள் இவரது பதவி நீக்கம் இடம் பெற்றது.

மண்டைதீவுத் தாக்குதல் நடைபெறுவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னரே இது குறித்த விரிவான அறிக்கையை பிரிகேடியர் சாந்த கொட்டேகொட சமர்ப்பித்திருந்தார் என்றும் —

அப்படி இருந்தும் இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்றும் —

இவரது பதவி நீக்க அறிவிப்பு ராணுவ வட்டாரங்களில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னரே, தாக்குதல் குறித்த தகவல் கிடைத்திருந்தது என்பதை ராணுவம் ஏற்றுக்கொண்டுள்ளது. அப்படியானால் ராணுவத்துக்கு ஏன் இவ்வளவு பெரிய இழப்பு ஏற்பட்டது என ஐலண்ட் நாளிதழ் கேள்வி எழுப்பியுள்ளது.

(இ)

# உரவகை மீதான முழுத் தடையால் பெரும்போகச் செய்கை பாதிப்பு

வடபகுதிக்கு உரவகை எடுத்து வருவதற்கான அனுமதி முற்றாக மறுக்கப்பட்டுள்ளதை அடுத்து, எதிர்வரும் பெரும்போக நெற்செய்கை பெரும் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது.

கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் இவ்வாறு கவலை தெரிவித்தார்.

வடபகுதிக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அமோனியா உரத்தை மாஹோ கப்பலில் ஏற்றிவர, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு, சுங்கத் திணைக்களம், துறைமுக அதிகார சபை ஆகியன அனுமதி வழங்கியிருந்தன. ஆனால் இறுதி நேரத்தில் துறைமுகத்திலுள்ள இருக்கும் 'றன்கல' கடற்படை முகாமின் அதிகாரி வடபகுதிக்கு] எதுவித உரவகையையும் எடுத்துச் செல்ல முடியாது எனக் கூறி அனுமதி மறுத்து விட்டார்.

இவ்விடயம் சம்பந்தமாக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இது தொடர்பாக தாம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும், அவர் இது பற்றி பின்னர் முடிவு செய்வார் என்றும் ஜனாதிபதி தெரிவித்து விட்டார் என்று அறிய வந்தது.

[ஐ-5-4]

## செய்முறை தேர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 6
தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் சங்கீதம், நடனப் பாடங்களுக்கான செய்முறைத்தேர்வு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இன்று ஆரம்பமாகிறது.

சங்கீத பாடத்துக்கான செய்முறைத் தேர்வு இன்று முதல் 14 ஆம் திகதி வரையும்—

நடன பாடத்துக்கான செய்முறைத் தேர்வு இன்று முதல் 10 ஆம் திகதி வரையும் — நடைபெறும் என்று தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (உ–3)

## தடகள போட்டி

கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை இல்லங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டி நாளை பிற்பகல் 1.45 மணிக்கு கலாசாலை மைதானத்தில் நடைபெறும்.

கலாசாலையின் அதிபர் திருமதி. சி. இராமநாதன் முதன்மை விருந்தினராகப் பங்குபற்றுவார். (உ–3)

★ ★ ★

சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 1. 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு ஆ கமலநாதன் தலைமையில் ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளரும் கல்லூரியின் முன்னாள் அதிபருமான திரு. சி. தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் பல்வேறு விளையாட்டுகளுக்கான சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில்—

★ 3 . 30 மணி:- உரும்பராய் வைத்தீஸ்வரா அணி எதிர் தையிட்டி திருவள்ளுவர் அணி.

★ 4 30 மணி:- சுன்னாகம் கலைவாணி எதிர் கைதடி குமர்நகர் அணி.

★ சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் தென்மராட்சி வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டங்களில்—

★ 3.00 மணி:- பண்டிதர் குடியிருப்பு அணி எதிர் தேவகி அணி

★ 4.00 மணி:- நாவற்குழி லவலிதா வி.க. அணி எதிர் ரேகா அணி.

பாஷையூர் சென். அன்ரனீஸ் கழக மைதானத்தில் நடைபெறும் வலி. கிழக்கு வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில்—

★ 4.00 மணி:- கோப்பாய் தோட்டம் எதிர் கிறீன் பீல்ட்

★ 5.00 மணி:- சென். லூட்ஸ் எதிர் செல். நிக்கிலஸ்.

★ ★ ★

யங்ரோயல் விளையாட்டுக் கழகம் 'உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- யங் கென்றிஸ் அணி எதிர் பொற்பதி அணி.

★ 4 . 30 மணி:- சென். மேரீஸ் அணி எதிர் செல். அன்ரனீஸ் அணி.

## சுவரொட்டி

இனவிரோதத்தைத் தூண்டும் வகையில் அமைந்த— விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட— சுவரொட்டிகள் புத்தளம் நகர மதில்களில் ஒட்டப்பட்டுள்ளன.

இச்சுவரொட்டிகளில் இலங்கையின் படம் வரையப்பட்டு அதில் புத்தளம் உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்கள் வேறாக அடையாளமிடப்பட்டிருந்தன.

---

உ

# பாராட்டுகின்றோம்

சுவிற்சர்லாந்து அடிக்ஸ்வீல் பதியில் அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய ஆலயத்து நூதன மஹா கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக அமர்ந்து நடத்தி வைத்து தமிழீழத்திற்கு பெருமையும் புகழையும் தேடித்தந்த ஈழத்தின் தலைசிறந்த சிவாச்சாரியார்களில் முதன்மையான வரான வாரெழு

**"சிவஸ்ரீ. பால. வைத்தியநாத சிவாச்சாரியார்"**

அவர்களையும், ஈழத்தில் இருந்து சென்ற ஏனைய சிவாச்சாரியார்களையும், தவில், நாதஸ்வர கலைஞர்களையும், பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிவபுரணி முத்தமிழ் மன்றத்தினர்

(37366)

---

# ஒகன், கிற்றார் வகுப்புகள்
## இடம் மாற்றப்பட்டுள்ளது

மாலு சந்தி, அல்வாய் வீதியில் நடைபெற்ற வகுப்புகள் இனிமேல்

**சிவா இல்லம்**

கரணவாய் கிழக்கு, கரவெட்டி, ராஜா பலசரக்கு மாளிகை வீதி என்ற விலாசத்தில் நடைபெறும்.

புதிய வகுப்புகள் ஆரம்பம்: **07.07.1995**
வெள்ளிக்கிழமை

ஆசிரியர்: இலங்கேஸ்
(ராஜன்ஸ் இசைக் குழு உறுப்பினர்)

(37369)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்


## சபையும் குழுவும்!

யுத்த ஆலோசனைச் சபையை நிறுவியது போல, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, படையினரின் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்கவும் ஒரு குழுவை நியமித்திருக்கிறார்.

போரில் விடுதலைப் புலிகளை வெல்ல வேண்டும்; அதற்கான புதிய திட்டங்கள், நுட்பங்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காகவே யுத்த ஆலோசனைச் சபை. அது காரியத்தோடுதான்.

படையினரும் பொலிஸாரும் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரித்து அதனைக் கட்டுப்படுத்துவதற்காகவே மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு என்று கூறப்படுகிறது.

போர் மீண்டும் ஆரம்பித்ததுமே, இப்போதே, கிழக்கில் பொலிஸாரும் படையினரும் தமிழ் மக்களை கண்டபடி கைது செய்து சித்திரவதை புரிவது மட்டுமன்றி கொலையும் செய்திருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டுத் தமது தரப்பில் இழப்பு ஏற்பட்ட வேளைகளில் மட்டுமன்றி, சும்மா வேளைகளிலும் வீடுகளுக்குச் சென்று தமிழ் மக்களைச் சுட்டுக் கொலை செய்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பு சாந்தமலைப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை பத்துத் தமிழ்ப் பொதுமக்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டது கிழக்கில் கடந்த இரண்டரை மாதங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஆகப் பிந்திய ஒன்றாகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா?

போர் தீவிரமடையு முன்னரே இந்த நிலைமையெனில், போர் முற்றும் போது படையினரின் அக்கிரமங்கள், அட்டூழியங்கள் — மனித உரிமை மீறல்கள் — மிகத் தாராளமாக இடம்பெறும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தின் மீது ஒரே நேரத்தில் பல முனைகளிலிருந்து தாக்கும் உத்தேச இராணுவத் திட்டத்தின் போது பொதுமக்களையே படையினர் மிகப் பெரும் எண்ணிக்கையில் கொன்று குவிப்பர் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

அப்போதெல்லாம் மனித உரிமை மீறல்கள் கண்காணிப்புக் குழுவினால் படையினரைக் கட்டுப்படுத்த முடியுமா? அல்லது கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் உட்பட்ட கோரமான வன்முறைகள் நடைபெறாமல் தடுக்கத்தான் முடியுமா? யார், எந்த நேரத்தில் எந்த வகையில் மனித உரிமைகளை மீறினார்கள் என்று இந்தக் குழுவினரால் கண்டறியத்தான் முடியுமா?

கொலைகள், சித்திரவதைகள், வன்முறைகள் — அரச பயங்கரவாதம் — மனித உரிமை மீறல்களா? மனித உரிமைகள் என்பன என்ன! அவற்றின் விலைகள் என்ன? என்று கேட்கும் நிலையிலேயே அரச படையினர் உள்ளனர்.

எனவே போர்க் காலத்தில் படையினரின் மனித உரிமை மீறல்களை கண்காணிப்புக் குழு நியமித்துத் தடுப்பது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. இது முழுக்க முழுக்க வெளி உலகத்தை ஏமாற்றும் தந்திரம்.

இந்தக் குழுவினால் படையினர் அல்லது பொலிஸார் நடத்தும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியாது. அவர்கள் நிகழ்த்திய மனித உரிமைகளை வேண்டுமானால் "பிரேத பரிசோதனை" மட்டுமே செய்ய முடியும்! அதனால் என்ன பயன்?

போர் என்ற பெயரில் அரச பயங்கரவாதத்தை அனுமதித்து — தூண்டி விட்டுக் கொண்டு — படையினர் நடத்தும் மனித உரிமைமீறல்களை தடுக்கப் போவதாக கண்காணிப்பதாகக் கூறுவது —

பிள்ளையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டிவிடும் செயலாகும். பாதுகாப்பு ஆலோசனைச் சபை போரைத் தீவிரப்படுத்தி தமிழரைக் கிள்ளும் [கொல்லும்]; மனித உரிமை மீறல் கண்காணிப்புக் குழு தொட்டிலை ஆட்டி உண்மையை வெளியே மறைக்கும்!

# மஞ்சள் நிற வானில் தமிழ் இளைஞர் கடத்தல்!

## கிராண்ட்பாஸில் சம்பவம்

கொழும்பு கிராண்ட்பாஸில் உள்ள 'ஹென்லூட்' லொட்ஜில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் இருவர் இலக்கத் தகடு மறைக்கப்பட்ட மஞ்சள் நிற வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நள்ளிரவு வேளை வானில் வந்தவர்கள் சிவில் உடையில் காணப்பட்டனர் என்றும்—

அவர்கள் ரி 56 துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லொட்ஜை சோதனையிட்ட அவர்கள் அங்கு தங்கியிருந்த சுரேஷ், சிறீதரன் ஆகிய இரு தமிழ் இளைஞர்களையும் வானில் கொண்டு சென்றனர். (ஐ-5)

# பொருள்களின் விலைகள் நாளுக்குநாள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்டத்தில் மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைகள் தினம் தினம் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் புகார் கூறுகின்றனர்.

மருந்துப் பொருள்கள், பல சரக்குப் பொருள்கள், பால்மா வகைகள், சவர்க்காரம், தீப்பெட்டி மற்றும் புடைவை வகைகள் போன்றவற்றின் விலைகளே அதிகரித்து வருகின்றன.

இந்தப் பொருள்களை கொழும்பிலிருந்து எடுத்துவர கப்பல் வசதி இல்லை என்றும் —

அதனாலேயே விலையேற்றம் ஏற்படுகிறது என்றும் — வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ-3)

# வருட இறுதிக்குள் மேலும் இரு பல்கலைக்கழகங்கள்

## நிறுவப்படும் என அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

இவ் வருட முடிவுக்குள் மேலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் புதிதாக நிறுவப்பட உள்ளன.

அனுராதபுரத்திலும், பெலிகுல் ஓயாவிலும் இவை அமையவுள்ளதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதன் காரணமாக பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையும் ஆயிரத்து ஐந்நூறினால் அதிகரிக்கப்படவுள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள 11 இணைப்புப் பல்கலைக்கழகங்களில் 9மட்டுமே இப்போது இயங்கிக் கொண்டுள்ளன.

பெலிகுல் ஓயாவில் அமையவுள்ள பல்கலைக்கழகம் றகலை, புத்தளை, சமனலவேவ ஆகிய இணைப்பு பல்கலைக்கழக கல்லூரிகளின் வளங்களையும் அனுராதபுர பல்கலைக்கழகம் குளியாப்பிட்டியா, பொல்கொல்ல, அனுராதபுர இணைப்புப் பல்கலைக்கழக கல்லூரிகளின் வளங்களையும் பயன்படுத்தும்.

இணைப்புப் பல்கலைக்கழக கல்லூரிகளில் டிப்ளோமா கல்வியைப் பெற்றவர்கள் தமது பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இவற்றில் வாய்ப்பு வழங்கப்படும்.

மேற்படி பல்கலைக்கழக கல்லூரிகளின் குறைபாடுகள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு அமையவே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனினும் தற்போது பல்கலைக் கல்லூரிகளில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் வெளியேறும் வரை பல்கலைக்கழக கல்லூரித் திட்டம் தொடர்ந்து அமுல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் இங்கு வழங்கப்படும் கல்வி நெறியானது நடைமுறைக்கு ஏற்ற வகையில் அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-14)

# இடைக்கால சபைக்கு இது ஏற்ற தருணம் அல்ல

## சிங்களப் பிரமுகர்கள் கடிதம்

கொழும்பு, ஜூலை 6

'இடைக்கால நிர்வாகசபை என்ற பரிசோதனையை நடத்துவதற்கு இது தருணம் அல்ல. யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் அதிகாரத்தைப் பகிர முடியாது'

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஆர். எஸ். வனசுந்தர உட்பட 59 சிங்களப் பிரமுகர்கள் அரசாங்கத்துக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைப்பதற்கான திட்டங்களைக் கைவிட்டு —

இப் பிரதேசங்களின் நிர்வாக அதிகாரங்கள் அனைத்தையும் ராணுவ இணைப்பு அதிகாரிகளிடம் வழங்குமாறு மேற்படி அறிக்கை கோருகின்றது. (க)

# சுருவில் பகுதியில் இருந்தே தற்போது படகுச் சேவை

தென்மராட்சி, ஜூலை 6

காரைநகர் கடற்படைத்தளத்திலிருந்து நடத்தப்பட்டு வந்த தீவுப்பகுதி மக்களுக்கான படகுச்சேவை கடந்த மாதம் முதல் ஊர்காவற்துறை சுருவில் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியிலிருந்து வரும் பயணிகள் சுருவில் கடற்கரையில் இறக்கப்பட்டு வாகனங்கள் மூலம் ஊர்காவற்றுறைப் பாலத்துக்குக் கொண்டு வரப்படுகின்றனர். அங்கு கடற்படையினரின். சோதனை நடைபெறுகிறது பின்னர் கடற்படைப் படகுகளில் பயணிகள் கப்பலுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். (ஓ-117)

## வடக்கே சேவையில் ஈடுபடும்

# கப்பல்களில் அதிகாரிகள் பயணம் செய்யத்தடை

யாழ்ப்பாணம், ஜூலை 6

வடக்கிற்கு பொருள்கள் ஏற்றி வரும் சரக்குக் கப்பல்களில் எந்த அதிகாரியும் பயணம் செய்யக்கூடாது என்று பாதுகாப்பு இணைப்புக்குழு தடை செய்துள்ளதாக தெரியவந்தது.

வடக்கிற்கு பொருள்கள் ஏற்றிவரும் பணியில் ஈடுபடும் சரக்குக் கப்பல்களில், அரச ஊழியர்கள், சர்வதேச அமைப்புக்களின் அதிகாரிகள் போன்றோர் தமது அவசர கடமைகளின் நிமித்தம் பயணம் செய்வதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தற்போது வடக்கே வரும் சரக்குக் கப்பல்கள் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியிலேயே தரித்து நிற்பதால், கடற்படையினர் அங்கு சென்று கப்பல்களை சோதனையிட மறுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக சரக்குக் கப்பல்களில் பயணிகள் எவரும் பயணம் செய்ய பாதுகாப்பு இணைப்புக்குழு தடை விதித்துள்ளது.

இதனால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் போன்றோர் அவசர தேவைகளுக்கு கொழும்பு செல்ல முடியாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் இந்த அமைப்புக்களின் அதிகாரிகள் விமானமூடாக பயணம் செய்வதற்கு, அவர்களின் [illegible] வலகங்கள் அனுமதி வழங்கவில்லை என [illegible] தக்கது. [ஐ-5-3]

# விடுதலைப் புலிகள் இயக்கத்தை முற்றாக அழித்துவிட முடிவாம்

## அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அறிவிப்பு

கொழும்பு. ஜூலை 6

சாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தடையாக உள்ளது. அதனால் அந்தஅமைப்பை முற்றாக அழித்து விடுவதென அரசு முடிவு செய்துள்ளது.

விரிவான நன்கு திட்டமிடப்பட்ட திட்டம் ஒன்றின்படி விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசு அமுல் செய்யும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கென தோட்டத் தொழிலாளர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 5லட்சத்து 75 ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் இவ்வைபவம் இடம்பெற்றது.

ஆயுதப் படையினரும், பொலிஸாரும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவார்கள் என்று அரசு பூரணமாக நம்பிக்கை கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நிக்கடுவ தேவ நம்பியதீசன் மகாவித்தியாலய மாணவர்களால் சேகரிக்கப்பட்ட 36 ஆயிரத்து 841ரூபாவும், பாடசாலை அதிபரினால் இவ்வைபவத்தில் கையளிக்கப்பட்டது. [ஐ-14]

## புலிகளின் குரல் வானொலியில்

06 – 07 – 1995

வியாழன் இரவு

- ★ 8-02 — நேற்று நடைபெற்ற கரும்புலிகள் நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — மொழியும் வாழ்வும்
- ★ 8-50 — எங்களின் தேசம்

07 – 07 – 1995

வெள்ளி காலை

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15 — மணியாரம்
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 8-00 — தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — இசையும் கதையும்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பொன்விளையும் பூமி
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து கேள்வி பதில்

## ஜி. சி. ஈ பரீட்சை கட்டணம்

ஜி. சி. ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு தனிப்பட்ட ரீதியில் விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் தமது பரீட்சைக் கட்டணத்தை செலுத்துவதற்குரிய கடைசி நாள் இம் மாதம் 31ஆம் திகதி ஆகும்.

இதற்கேற்ப பரீட்சார்த்திகள் அஞ்சல் அலுவலகங்களிலோ அல்லது உபஅஞ்சல் அலுவலகங்களிலோ தமது கட்டணத்தை முன்னைய ஆண்டுகளில் செலுத்தியது போலவே செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளும்படி யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு. க. கோடீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைக்கான கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். [ஐ-5]

## தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் இலவசமாக நடத்தப்படவுள்ள தமிழ் மொழி மூலம், தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு இம் மாதம் 9 ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ளன.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளன இப் பயிற்சி வகுப்புக்கான நிதியை பருத்தித்துறை பிரதேச செயலகம் பன்முக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளது. [5-173]

## பொன் விழா

யாழ்ப்பாணம் ஜூலை 6

இலங்கை வங்கி, யாழ் மேற்தரக் கிளையின் பொன்விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வங்கி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

பொன்விழா மலர் வெளியீடு, யாழ். ஆஸ்பத்திரிக்கான வைத்திய உபகரண அன்பளிப்பு [illegible] ஆகிய நிகழ்வுகளும், கலை [illegible] இடம்பெறும். (ஐ-5)

## மண்டை தீவு தாக்குதல் தினத்தில்

# யாழ் கரையோரப் பகுதிகளில் புலிகள் ஏவுகணைகளை வைத்திருந்தனராம்

## ராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

மண்டைதீவுத் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர் புலிகள் தம் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் விமான எதிர்ப்பு ஆயுதங்களை தயார் நிலையில் வைத்திருந்தனர் என்றும்—

பரீட்சார்த்த நடவடிக்கையாக அதிசக்தி வாய்ந்த தேடுதல் ஒளியை அவர்கள் பாய்ச்சியதை தாங்கள் கண்டதாகவும் — மண்டைதீவு முன்னணி காவலரண்களில் இருந்த படையினர் தெரிவித்துள்ளனர் என்று ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

சம்பவ தினம் கடற்புலிகளின் படகுகள் ஆட்களையும் பொருள்களையும் மண்டைதீவுக்கும் மண்டைதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் ஏற்றி இறக்கியதாகவும் மண்டைதீவுப் படையினருக்கு உதவ விமானங்கள் வந்தால் அவற்றை சுட்டு வீழ்த்த புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்றும்—

புலிகள் நிலத்திலிருந்து ஆகாயத்துக்கு ஏவும்சாம் ஏவுகணைகளையும் சுவிஸ் தயாரிப்பான ஒலிகன் விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் தயாராகவைத்திருந்தனர் என்றும்— ராணுவவட்டாரங்கள் தெரிவித்ததாக ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகள் அதிசக்திவாய்ந்த ஒளி பாய்ச்சும் சாதனங்களை வைத்திருப்பதாகவும் விமானங்களையும் ஹெலிக்கொப்டர்களையும் கண்டுபிடிப்பதற்கு இவை பயன்படுத்தப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மண்டைதீவில் காயமடைந்த படையினரை கொண்டுசெல்வதற்கு ஹெலிகளைப்பயன்படுத்த முடியாது போனதால், காயமடைந்தவர்கள் தரை மார்க்கமாகவே ஊர்காவற்றுறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து ரஷ்யத்தயாரிப்பான எம் ஐ-17 ரக ஹெலிக்கொப்டர்கள் மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

# அடையாளம் காணாத 24 சடலங்கள் ஞாயிறன்று கனத்தையில் தகனம்

## பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை

கொழும்பு, ஜூலை 6

மண்டைதீவுத் தாக்குதலில் கொல்லப்பட்ட நூறுக்கு மேற்பட்ட படையினரின் சடலங்களில் 24 சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

அடையாளம் காணப்படாத சடலங்கள் பலத்த பாதுகாப்புக்களின் மத்தியில் கடந்த ஞாயிறன்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

அடையாளம் காணப்பட்ட சடலங்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அடையாளம் காணப்படாத சடலங்கள் கனத்தை மயானத் துக்குக் கொண்டு வரப்பட முன்னரே வீதிகளில் தடைகள் போடப்பட்டன. கனத்தை மயானத்துக்குள் செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை. மயானத்துக்கு வெளியே நிற்கவும் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

மூடி சீல் வைக்கப்பட்ட 24 பிரேதப் பெட்டிகளும் ஆறு டிரக் வண்டிகளில் கனத்தை மயானத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தன.

இந்தச் சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக மூன்று தினங்கள் கொழும்பில் வைக்கப்பட்டிருந்தன.

அடையாளம் காணமுடியாத நிலையிலேயே ஞாயிறன்று தகனம் செய்யப்பட்டன.

தகனக்கிரியைகளின் போது பத்திரிகையாளர்கள், படப்பிடிப்பாளர்கள் எவருமே கனத்தை மயானத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை.

கனத்தைக்குள் நின்றபடை அதிகாரிகள் நிகழ்ச்சிகளை படம் பிடித்துக்கொண்டனர்.

## பாடசாலைகளில்

மயிலணி, ஜூலை 6

கன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று பிற்பகல் 1, 30 மணியளவில் வித்தியாசாலை மைதானத்தில் அதிபர் திரு. வி. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெறும். வலயம்-2 உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு வி இராஜையா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ 5- 89)

# அதிகாரிகளின் அசிரத்தையால் 'மாஹோ' புறப்படுவதில் தாமதம்

## ஒரு மாதத்துக்கு மேல் துறைமுகத்தில் தவம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

கொழும்பின் அரச அதிகாரிகளின் அசிரத்தை காரணமாக "மாஹோ" கப்பலில் பொருள்கள் ஏற்றுவது தாமதமாவதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

கடந்த ஒருமாதத்துக்கு மேலாக கொழும்பு துறைமுகத்தில் பொருள் ஏற்றுவதற்காக தரித்து நிற்கும் "மாஹோ" கப்பலில் பொருள்கள் ஏற்றுவதற்கு திடீர்திடீரென புதிய விதிகள் நடைமுறைப்படுத்தப்படுவதினால் பொருள்கள் ஏற்றும் பணி மெதுவாக நடப்பதாகவும்—

கப்பல் எப்போது வடக்கு நோக்கிப் புறப்படும் என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை என்றும்— தெரிய வந்தது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு மட்டும் டீசல் எடுத்துவர அனுமதி வழங்கப்பட்ட போதும், நேற்று வரை அந்த டீசல் கப்பலில் ஏற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் உள்ள பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் திமிடத்துக்கு ஒரு சட்டத்தை அமுல் செய்வதாகவும்—

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் வடக்கே செல்ல அவர்கள் மறைமுகமாக தடையாக இருப்பதாகவும்— தெரியவந்தது.

## மாலை ஆறுமணிக்குப் பின்

# வீடுகளில் முடங்கிவிடும் கொழும்பு தமிழர்கள்

தலைநகரில் வசிக்கும் தமிழர்கள் மாலை 6மணிக்குப்பின் வெளியே நடமாட அஞ்சுகின்றனர்.

நிரந்தரமாக அங்கு வசிப்போரும் சரி, வெளியிடங்களில் இருந்து வந்து தங்கியுள்ளோரும் சரி மாலை 6 மணியானதும் பொதும் பாலும் வீடுகளுக்குள் முடங்கி விடுகின்றனர்.

முன்னெப்போதும் இருந்திராத ஒரு வித பீதி நிலை தமிழர்களிடையே தோன்றியுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கொழும்பிலும், புறநகரப் பகுதிகளிலும் தமிழர்களின் வர்த்தக மையங்களில் மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆயிரமாயிரம் இளைஞரின் உயிர்ப்பலி வீணாகாது

## கிறிஸ்தவ மாநாட்டில் செய்தி

''நடைபெற்றுவரும் யுத்தத்தில் ஏற்பட்ட பல்லாயிரக் கணக்கான இளைஞர்களின் உயிர்ப்பலி வீண்போகாது''

ஆசிய கிறிஸ்த்தவ மாநாடு யாழ்ப்பாண கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கென எழுதிய சிறப்புக் கடிதம் ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

''இந்த உயிர்ப்பலிகள் நியாயமான சமாதானம் என்ற வெகுமதியை தந்தே தீரும். சமாதானத்தின் ஆண்டவன் சமாதானம் ஏற்படும் காலத்தைத் துரிதப்படுத்தி உங்களுடைய சோதனைக் காலத்தைக் குறைப்பாராக'' எனவும் இந்த ஆறுதல் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. (க)

# கட்டுநாயக்காவில் புதிய வாகனத் தரிப்பிடம்

கொழும்பு, ஜூலை 6

கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பைக் கருதி விமான நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் புதிதாக வாகனத் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படுகிறது.

விமான நிலையத்துக்கு அருகில் இருந்த வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வான் ஒன்றில் இருந்து அண்மையில் குண்டு வெடித்ததை அடுத்து அந்தத் தரிப்பிடம் மூடப்பட்டது.

தற்காலிக ஏற்பாடாக வாகனங்கள் தற்போது மினுவாங்கொட வீதிப் பகுதியில் நிறுத்தப்படுகின்றன.

புதிதாக அமைக்கப்பட்டு வரும் வாகனத் தரிப்பிடத்துக்கும், விமான நிலையத்துக்கும் இடையே பயணிகளின் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு வசதியாகத் துரித போக்குவரத்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இடம்பெயர்ந்தோர்களின் முத்திரைகளுக்கு பால்மா

யாழ்ப்பாணம், ஜூலை 6

இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவுப் பொருள்களில் இம்முறை பால்மாவும் வழங்கப்பட இருக்கிறது. நீண்டகால இடைவெளியின் பின்னர் பால்மா வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

மே மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்குரிய முத்திரைகளுக்கும், ஜூன் மாதத்தின் முதல் இரு வாரங்களுக்குரிய முத்திரைகளுக்கும் 'ஹைலண்ட்' பால்மா வழங்கப்பட உள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த முத்திரைகளுக்கு (27 பி, 28 ஏ) இரண்டு பேர் உள்ள குடும்பங்களுக்கு தேயிலையும், மூன்று அங்கத்தவர்கள் உள்ள குடும்பங்களுக்கு வெந்தயமும் வழங்கப்படும்.

இந்த இரண்டு கட்டங்களுக்கும் உரிய உலர் உணவுப் பொருள்களை எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் விநியோகித்து முடிக்குமாறு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன. வேண்டிய உலர் உணவுப் பொருள்கள் ஏற்கனவே ப.நோ.கூ. சங்கங்களுக்கு புனர்வாழ்வுப் பகுதியினால் வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [க-6]

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா திருநாவுக்கரசு

(ஓய்வுபெற்ற ஆசிரியர் — சண்முகநாத மகா வித்தியாலயம் - புங்குடுதீவு)

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், 12 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த தம்பிஐயா திருநாவுக்கரசு சுவிஸில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா—முத்துப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும், சிவனடியான், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (பழநி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தனிநாயகம்—செங்கமலம் தம்பதியினரின் மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சுதாமதி (சுவிஸ்), தயாநிதி (ஜேர்மனி), கிருபாகரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தந்தையாரும், திலகேந்திரராசாவின் மாமனாரும், ஐயாத்துரை, சவுந்தரம் (ஆசிரியை), மனோன்மணி, நேசமலர், பூலோகநாயகி ஆகியோரின் மைத்துனரும், கதிரவேலு, சுப்பிரமணியம், சிவசோதி ஆகியோரின் சகலனும், சோனியா, ருபிகா, விதுர்சன் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருவதுடன், கீழ்க் குறித்த விலாசத்தில் அன்னாரின் மறைவு குறித்துத் துக்க நிகழ்வு இன்று [6-7-95] நடைபெறும் என்பதையும் தெரிவிக்கின்றோம்.

தகவல்:
திரு. திருமதி
சுப்பிரமணியம் மனோன்மணி

66/1, இந்து மகளிர்-
கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [37370]

ஸ்ரீலங்கா அரசுக்கு உதவும் நாடுகளில் உள்ள

# பல்வேறு கெரில்லா இயக்கங்களுடன் சேர்ந்து செயற்பட புலிகள் முடிவாம்

அமெரிக்கா உட்பட மேலும் பல நாடுகளின் உதவியுடன் தமது அமைப்புமீது ஸ்ரீலங்கா அரசு பாரிய தாக்குதலை மேற்கொள்ள முயற்சிக்குமாயின் அந்தந்த நாடுகளிலுள்ள கெரில்லா அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதென புலிகள் தீர்மானித்துள்ளனராம்.

''லக்பிம'' சிங்கள வார இதழ் இவ்வாறு தெரிவிக்கிறது.

இடைக்கால நிர்வாக அமைப்புத் தொடர்பாக புலிகள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-10)

## தகவல் தரவும்



மேற்படி படத்தில் உள்ளவர் தான் புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர் எனக்கூறி பல மோசடிகள் செய்துள்ளார் என்பது தமது விசாரணையின் போது தெரியவந்துள்ளது என்றும் —

இவரினால் பாதிக்கப்பட்டவர்கள் இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் மேலதிக விசாரணைக்காக இவர்பற்றிய தகவல்களைத் தரும்படியும் —

தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். (உ)

## ஏறாவூரில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் காயமுற்றனர்.

ஏறாவூர் பகுதியில் வெளிநாடு சென்ற ஒருவரின் மனைவியான முஸ்லிம் இளம் பெண் ஒருத்தியும், ஒரு சிறுவனும் அண்மையில் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இக்கொலைகள் தொடர்பாக அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது சந்தேகம் கொண்டதுடன், இது பற்றிய கண்டனத்தைத்தெரிவிக்க பொலீஸ் நிலையத்தை நோக்கி ஊர்வலமாகச்சென்றனர். அப்போதே பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்பட்டது. [உ-10]

## பொலீஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றோஹண என்ற பெயருடைய இந்த சப்- இன்ஸ்பெக்டர், செட்டிப்பாளையம் பொலீஸ் நிலையம் மீது புலிகள் தாக்குதல் நடத்துவதற்கு பத்து நாட்களுக்கு முன்னர் அப்பகுதி புலிகளின் தலைவருடன் பேச்சு நடத்தினார் என்றும்—

அடிக்கடி புலிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு பாதுகாப்பு இரகசியங்களை புலிகளுக்கு அவர் வழங்கியிருக்கலாம் என அவரைக் கைது செய்த களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் கருதுவதாகவும்—

''திவயின'' சிங்களப் பத்திரிகை தெரிவித்தது. (உ-ஐ-3-5-10)

## வவுனியா எல்லைப் புறத்தில்

# சிங்களப் பெண்களும் ஊர்காவல் படையில்

கொழும்பு, ஜூலை 6

வவுனியா மாவட்டத்தின் எல்லைப்புற சிங்களக் கிராமங்களில் உள்ள பெண்களையும் ஊர்காவல் படையில் சேர்க்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா எல்லைப்புற சிங்களக் கிராமங்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் துரித நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே இது மேற்கொள்ளப்படுகின்றதாம்.

ஏற்கனவே இங்கு ஐநூறுக்கும் மேற்பட்ட சிங்கள இளைஞர்கள் ஊர்காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஊர்காவல் படையினரின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலம் சிங்களக் கிராமங்களின் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல்களையும், ஊடுருவல்களையும் தடுக்கலாம் என்பதற்காகவே பெண்களும் அதில் சேர்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## ஸ்ரீலங்காப்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில்—

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ அடுத்த மாத முற்பகுதியில் ஸ்ரீலங்காவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-6)

## கரும்புலி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த ஊர்திகள் நேற்று பவனியாகவந்து சேர்ந்தன.

வலிகாமம் பகுதியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட பிரமாண்டமான ஊர்தி மக்கள் மனதைக் கவரும் வண்ணம் அமைக்கப் பட்டிருந்தது

ஊர்தியின் முற்பகுதியை முதற்கரும்புலி மில்லரின் வெடிமருந்து தாங்கிய வாகனமும், மில்லரின் திருவுருவமும் அலங்கரித்துக் கொண்டிருந்தன.

ஏனைய பகுதிகளில் இருந்து வந்த ஊர்திகளில் கரும்புலித் தாக்குதலுக்கிலக்கான கப்பல்கள், பாசறைகளின் மாதிரி சித்திரங்கள் வரையப் பட்டிருந்தன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்று வீதிகள் சிவப்பு,மஞ்சள்,கறுப்பு,நீலவர்ணங்களாலான கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே முக்கிய பகுதிகளில், பிரதான சந்திகளில் கரும்புலிகளின் சாதனைகள் பொறிக்கப்பட்ட அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நேற்று யாழ். குடாநாட்டின் சகல வியாபாரநிலையங்களும், தனியார் கல்வி நிறுவனங்களும், மூடப்பட்டிருந்தன.

போக்குவரத்துச் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. (அ-15)

## மீட்கும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவித்துள்ளது.

எமது விடுதலைக்காக நாம் போராடுவதே ஒரே வழி.

பேச்சுக்களின் போது பூநகரி முகாமை அகற்றி மக்களின் போக்குவரத்துக்காகப் பாதையைத் திறந்து விடுமாறு கோரினோம். கிழக்கில் நாம் ஆயுதங்களுடன் நடமாடுவதற்குக் குறுக்கே நிற்கவேண்டாம் என்றோம்.

அப்போது கிழக்கில் கணிசமான பகுதி அரசிடம் இருந்தது.

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. கிழக்கில் அரசின் இருபது முகாம்கள் அகற்றப்பட்டு விட்டன. மட்டக்களப்பில் உதவி அரச அதிபர் பிரிவு ஒன்றில் படையினரின் அனைத்து முகாம்களும் மூடப்பட்டு விட்டன. அங்கிருந்த படையினரில் நாற்றுக்கணக்கானோர் பலியாகிவிட்டனர்.

### கிழக்கில்

பல பிரதேசங்களை புலிகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துவிட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருப்பது போன்று கிழக்கிலும் எமது நிர்வாகத்தை நடத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளோம்.

எமது படைபலத்தை அதிகரித்தால் எமது பிரதேசங்களில் மேலும் பல பகுதியை எமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

கரும்புலிகள் இருக்கும் வரை எமது நாடு உருவாவது நிச்சயம்.

முன்னர் ஆயுதத்தை எடுப்பதற்காக போராளிகள் தமது உயிரைக் கொடுத்தார்கள். இன்று உயிரையே ஆயுதமாக்கும் புதிய பரிமாணத்தை அவர்கள் தோற்றுவித்துள்ளார்கள். — என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கடற் புலிகளின் சிறப்புத் தளபதி திரு எஸ் சூசை, விடுதலைப் புலிப் பிரமுகர் திரு வே.பாலகுமாரன், மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தமிழ்ச்செல்வி ஆகியோரும் உரையாற்றினார்கள். (உ-111-173)

# வடமராட்சியில் நேற்றும் கடற்படை விரட்டியடிப்பு

மூன்று விசைப்படகுகளில் வந்து கரையை நோக்கி நேற்றுத் தாக்குதல் நடத்திய கடற்படையினர் விரட்டியடிக்கப்பட்டனர்.

பருத்தித்துறை முனை கடற்பகுதியில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் வெற்றிலைக்கேணிப் பக்கமாக இருந்து மூன்று விசைப்படகுகளில் வந்த கடற்படையினர் கரையை நோக்கித் தாக்குதல் நடத்தினர்.

அவ்வேளை புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தவே கடற்படையினர் வேகமாக ஓடி மறைந்தனர். [அ-173-118]

# அமைதியான போராட்டமே மீட்பு முன்னணியின் வழி

## நிஹால் கலப்பதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 6

ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்ற தமது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தவறிவிட்டதை ஆட்சேபித்து—

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் அமைதியான எதிர்ப்பு நடவடிக்கைகளே மேற்கொள்ளப்படும் என தேசிய மீட்பு முன்னணி எம். பியான நிஹால் கலப்பதி அறிவித்திருக்கிறார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி நுகேகொடையிலும் பின்னர் அம்பாந்தோட்டை மாவட்டம் திஸ்ஸமாரமாவிலும் ஆட்சேபக் கூட்டங்கள் நடைபெறும் என்றார் அவர்.

## செங்கலடியில்

# இரு தமிழரின் சடலங்கள் பொலீஸார் ஒப்படைப்பு

கொழும்பு, ஜூலை 6

துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இரு ஆண்களின் சடலங்கள் கடந்த வியாழனன்று மாலை ஏறாவூர் பொலீஸாரினால் செங்கலடி ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

விமல்ராஜ் (வயது 20) அவரது மாமனாரான செல்லத்தம்பி செல்வரட்ணம் (வயது 32) ஆகியோரின் சடலங்களே அவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இவர்களில் விமல்ராஜ் 8 நாட்களுக்கு முன்பு காணாமற்போயிருந்தார் என்றும், பின்னர் அவரது சடலம் பாலையடித்தோணா பகுதியில் கிடக்கக் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மற்றவரான செல்லத்தம்பி செல்வரட்ணம் அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-ஐ]

## சட்டமூலம் நிறைவேறியது

கொழும்பு, ஜூலை 6

பாதுகாப்பு செலவீனத்தை சமாளிக்க மேலதிக வருமான வரி விதிக்கும் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேறியது. நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இந்த சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். [உ-3]

## வீதி விளக்கு

வட்டுக்கோட்டை அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி விளையாட்டுக் கழகத்தினர் வலி மேற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டைச் சந்தியில் ஓர் வீதி விளக்கை அமைத்துள்ளனர்!

## வீட்டு நாய்களுக்கு உரிமம் பெற கோரிக்கை

வலிதென்மேற்கு பிரதே) சபை பிரிவிலுள்ள வீட்டு நாய்களுக்கு இவ்வருடத்திற்கான உரிமம் (லைசென்ஸ்) பெறப்படவேண்டும் என்றும் இவ்வாறு உரிமம் பெறப்படாமலிருக்கும் நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு வீதிகளில் வரும்போது பிடிக்கப்பட்டு அழிக்கப்பட ஏதுவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## நெல்லியடி நேற்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து ஒவ்வொரு கோட்டத்திலிருந்து வந்த ஊர்திகளும், பொதுமக்களும் ஊர்வலமாக மைதானத்தை வந்தடைந்தனர்.

ஊர்தியில் ஒரே ஊர்தியில் ஹெலி, கவசவாகனம், கப்பல் ஆகிய மூன்றும் வடிவமைக்கப்பட்டிருந்தது சிறப்பம்சமாக இருந்தது.

ஊர்வலத்தை தொடர்ந்து சரியாக 7-05 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதலாவது கரும்புலிகப்டன் மில்லரின் உருவச்சிலையை தமிழ் ஈழ அரசியல் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் திரை நீக்கம் செய்து வைத்தார். தொடர்ந்து மில்லரின் சிலைக்கு அவரது தயார் திருமதிவல்லிபுரம்மலர்மாலை அணிவித்தார். கரும்புலிகளின் நினைவாலயத்தை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

நினைவாலயத்திலுள்ள கரும்புலிகள் பொதுச் சின்னத்தை கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. செ இளையவன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

நினைவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த 43 கரும்புலிகளின் உருவப்படங்களுக்கும் அவரவர்களின் உறவினர்கள்மாலை அணிவித்தனர். கரும்புலிகளுக்கு மாலை அணிவித்தல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒவ்வொரு கரும்புலிகளின் பெயர்களிலும் புறாக் கூடுகள் பறக்கவிடப்பட்டன. [அ-173-118]


## வரலாற்று நாடகம்

கலைக் காவிய நாயகன் வல்வை ஹெலியன்ஸ் நண்பர்கள் வழங்கும்

# காவியத் தலைவன்

[மாதோட்ட வனங்காம அரசன் கயிலை வன்னியன் வரலாறு]

நாடக ஆக்கம், நெறியாள்கை: ச. காந்திதாசன்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம் காலம்: 15 - 07 - 1995 சனிக்கிழமை மாலை 6-30 மணி

★ கட்டணம் ரூபா 1,000-00 ரூபா 500-00 ரூபா 100-00

ரிக்கற் கிடைக்குமிடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை
கேணல் கிட்டுசாலை, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

இ. குகன் விருந்தகம் (றோலக்ஸ்)
கேணல் கிட்டுசாலை, யாழ்ப்பாணம்.

பாரதி பதிப்பகம் (A.B. PRINTERS)
430, காங்கேசன் சாலை, யாழ்ப்பாணம்.

[சி-1607]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 06 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.